DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 29/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திருமதி. மலர்மணி

Father's Name (or)

Husband Name : க/பெ. பாண்டி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused Present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 19.12.2023

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சேத்திடலில் வசித்து வருகிறேன். கூலி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

2. எதிரிக்கும், எனது மாமனாருக்கும் ஏற்கனவே இடப்பிரச்சினை சம்மந்தமாக நாங்கள் பேசிக்கொள்ளமாட்டோம். 06.08.2020ம் தேதி மாலை 06.30 மணிக்கு கூட்டாம்புளி ஊருக்குள் நான், எனது அப்பா லெட்சுமணன் ஆட்டோவில் வந்தபோது எதிரி லாரியில் வந்து லாரியை நிப்பாடி லாரியிலிருந்து கடப்பாறை எடுத்து எங்களை குத்த வந்தார். ஊரில் இருந்தவர்கள் எல்லோரும் பிடித்துவிட்டார்கள். அதன்பிறகு லாரியை எடுத்து கொண்டு எதிரி தப்பித்துவிட்டார். சம்பவத்தால் எனக்கும், எனது அப்பாவுக்கும் மயக்கம் வந்துவிட்டது. உடனே எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

3. பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆர்.எஸ்.மங்கலம் போலிசார் வந்து என்னிடம் என்ன நடந்து என்று கேட்டார்கள், நான் நடந்ததை சொன்னேன். போலீசார் எழுதி கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் அது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவம் ஊருக்குள் நடக்காமல் வெளியில் நடந்திருந்தால் நானும், எனது அப்பாவும் இறந்தே போயிருப்போம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது மாமனாருடைய தம்பி மகன்.

2. இடப்பிரச்சினை சம்பந்தமாக எதிரியோடு பேசிக்கொள்ளமாட்டோம். நான்

புகாரை நானே தான் எழுதி கொடுத்தேன். சம்பவம் நடந்த மறுநாள் எழுதி கொடுத்தேன். பக்கத்தில் இருந்த புகார் எழுதுபவரை வைத்து புகார் எழுதினேன். ஒரே பக்கத்தில் எழுதி அதில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து 09.08.2020ம் தேதி தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. நான் மயக்கமான பிறகு எனக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எதிரி அறைந்ததில் ஒரு கம்மல் காணாமல் போய்விட்டது. என் அப்பாவிற்கு மயக்கமாகிவிட்டதால் என்ன நடந்து என்று எனக்கு தெரியாது.

4. எதிரிக்கு பெண் பார்த்த வீட்டில் குடிகாரன் என்று சொல்லி நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. கூட்டாம்புளி விளக்கு அருகில் தான் சம்பவம் நடந்தது. சம்பவத்தை அருகில் இருந்த 30 நபர்கள் பார்த்திருப்பார்கள்.

5. எதிரிக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**